# அரையாண்டுப் பொதுத் தேர்வு, டிசம்பர் - 2019

பதிவெண் | | | | | | |

## வகுப்பு 12

## PART - III - வரலாறு

நேரம்: 3.00 மணி

மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்: (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். (2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**20×1=20**

குறிப்பு: **i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**ii)** கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?

அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2) இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்

அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள்

இ) A.O. ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

3) பானாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?

அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன் மோகன் மாளவியா

இ) திலகர் ஈ) பி.பி. வாடியா

4) பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.

| | |
|---|---|
| 1. கதார் கட்சி | 1916 |
| 2. நியூ இந்தியா | 1913 |
| 3. தன்னாட்சி இயக்கம் | 1909 |
| 4. மிண்டோ-மார்லி சீர்திருத்தம் | 1915 |

அ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

ஆ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

இ) (1)-(i), (2)-(iv), (3)-(iii), (4)-(ii)

ஈ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

5) கூற்று : 1870-இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில் வல்லுநர் குழுக்களிடையே ஐயங்களை ஏற்படுத்தியது.

காரணம் : அவ்வாணை உருதுமொழி பாரசீக-அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டு வந்தது.

அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.

இ) கூற்று தவறு காரணம் சரி. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

6) இரு நாட்டு கொள்கையை முதன் முதலில் கொண்டு வந்தவர் ............

அ) இராஜாஜி ஆ) ராம்சே மெக்டொனால்டு

இ) முகமது இக்பால் ஈ) சர் வாசிர் ஹசன்

7) தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?
அ) மார்ச் 23, 1940 ஆ) ஆகஸ்ட் 8, 1940
இ) அக்டோபர் 17, 1940 ஈ) ஆகஸ்ட் 9, 1942

8) சுபாஷ் சந்திரபோஸ் எந்த ஆண்டு காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?
அ) 1938 ஆ) 1939 இ) 1940 ஈ) 1942

9) 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரச பிரதிநிதி
அ) வேவல் பிரபு ஆ) லின்லித்கோ பிரபு
இ) மௌண்ட் பேட்டன் பிரபு ஈ) கிளமண்ட் அட்லி

10) பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக.
i) ஜமின்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள்.
ii) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகளின் பயன்பாடு.
iii) தமிழ்நாட்டின் முதல் நில உச்சவரம்புச் சட்டம்.
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து விடையினைத் தேர்வு செய்க.
அ) (ii), (i), (iii) ஆ) (i), (iii), (ii)
இ) (iii), (ii), (i) ஈ) (ii), (iii), (i)

11) பூமிதான் இயக்கத்தைத் தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர் லால் பகுகுணா

12) டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது?-
அ) 1905 ஆ) 1921 இ) 1945 ஈ) 1957

13) கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
அ) மறுமலர்ச்சி ஆ) சமயச்சீர்திருத்தம்
இ) புவியியல் கண்டுபிடிப்பு ஈ) வர்த்தகப் பபுரட்சி

14) மனித குலத்தை சமய மரபு அல்லது அதிகாரம் மூலமாக ஆட்சி செலுத்தாமல் காரணம் மூலம் ஆட்சி செலுத்த வேண்டும் என்று விரும்பியவர் யார்?
அ) தாந்தே ஆ) மாக்கியவல்லி
இ) ரோஜர் பேக்கன் ஈ) பெட்ரார்க்

15) கீழ்க்கண்டவற்றுள் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
அ) வர்ஜின் ஆஃப் ராக்ஸ் ஆ) இறுதி விருந்து
இ) மோனாலிசா ஈ) மடோனாவும் குழந்தையும்

16) கெல்லாக் - பிரையாண்ட் ஒப்பந்தம் ............ ஆண்டில் கையெழுத்தானது.
அ) 1927 ஆ) 1928 இ) 1929 ஈ) 1930

17) சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?
அ) 1931 ஆ) 1932 இ) 1933 ஈ) 1934

18) போல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ............ ஆவார்.
அ) யாமமோட்டோ ஆ) ஸ்கூஸ் னிக்
இ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஈ) ஹிரோஹிட்டோ

19) அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு ............ல் நடைபெற்றது.
அ) பெல்கிரேடு ஆ) பெய்ஜிங் இ) பாண்டுங் ஈ) பாலி

20) ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24-இல் ............ உருவானது.
அ) 100 உறுப்பினர்களுடன்
ஆ) 72 உறுப்பினர்களுடன்
இ) 51 உறுப்பினர்களுடன்
ஈ) 126 உறுப்பினர்களுடன்

## பகுதி - II

**7×2=14**

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) பிரிட்டிஷ இந்தியாவில தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.

22) தேசிய இயக்கத்தை ஒடுக்க காலனிய அரசு மேற்கொண்ட அடக்குமுறைகள் யாவை?

23) கௌராக்ஷினி சபை பற்றி குறிப்பு வரைக.

24) கிரிப்ஸ் முன்மொழிவைக் காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?

25) ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?

26) சமதர்ம சமூக அமைப்பு என்பதைப் பற்றி நீ அறிந்ததென்ன?

27) பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.

28) பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

29) ஸோல்வரெய்ன் (Zollwerein) எனப்படுவதன் முக்கியத்துவம் யாது?

30) கொரியா எப்போது இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது?

## பகுதி - III

**7×3=21**

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

**வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.

32) 1908-இல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலை நிறுத்தம் பற்றி நீவீர் அறிவது யாது?

33) கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

34) சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

35) டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.

36) 1921-இல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து என்ன?

37) 1783-இல் கையெழுத்திடப்பட்ட பாரிஸ் உடன்படிக்கையின் முக்கியச் சரத்துக்களை விவாதிக்கவும்.

38) பிரான்சில் 1830-இல் நடந்த ஜூலை புரட்சி ஐரோப்பாவின் பிற பகுதிகளை எவ்வாறெல்லாம் பாதித்ததென்பதை எழுதுக.

39) நேட்டோவைப் போல ஏன் சீட்டோ (SEATO) பிரபலமடையவில்லை?

40) பாண்டுங் பேரறிக்கையில் ஏதேனும் மூன்றினை கூறுக.

## பகுதி - IV

**7×5=35**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:**

41) அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் பொருளாதாரக் காரணிகளை ஆய்க. **(அல்லது)**

ஆ) திலகர் மற்றும் அன்னிபெசன்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

42) அ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை விளக்குக.

**(அல்லது)**

ஆ) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்.

43) அ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனா எனபதையும் விளகுக.

**(அல்லது)**

ஆ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

44) அ) கிழக்கு பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன் முயற்சிகளை விவரிக்கவும். நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது? **(அல்லது)**

ஆ) பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ் பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரெஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக.

45) அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பெற்ற கூட்டு சிந்தனையாளர்களை (Collectivist thinkers) அடையாளப்படுத்தி அவர்கள் சோஷலிச சிந்தனையை செழுமையாக்க ஆற்றிய பங்கை கூறுக.

**(அல்லது)**

ஆ) முதல் உலகப் போரின் காரணங்களை கணக்கிடுக.

46) அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும் ஹிட்லரும் எந்த அளவிற்குக் காரணமானவர்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

**(அல்லது)**

ஆ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

47) அ) **இந்திய வரைபடத்தில் இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற ஐந்து இடங்களை குறிக்கவும்:**

(அ) டெல்லி (ஆ) சௌரி சௌரா

(இ) நாக்பூர் (ஈ) பூனா

(உ) வேதாரண்யம் **(அல்லது)**

ஆ) முதல் உலகப் போருக்கான நிகழ்வுகள் ஏதேனும் ஐந்து காலக்கோடிட்டு காட்டுக.